தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
விகாரி, பங்குனி 10, திருவள்ளுவர் ஆண்டு—2051
2020 மார்ச் 23, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஞாலம் கருதினும் கைகூடும், காலம்
கருதி இடத்தால் செயின்."

ஒரு தொழிலைச் செய்வதற்கேற்ற காலத்தையும், இடத்தையும் அறிந்து செய்தால் இந்த உலகத்தையே அடைய வேண்டுமென்று நினைத்தாலும் அது கைகூடும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 156, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

156—

விளையாட்டுப் பள்ளி

***35660—திரு. ஆர். கணேஷ்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உதகமண்டலம் தொகுதி, உதகமண்டலத்தில் விளையாட்டுப் பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உதகமண்டலம் தொகுதி, உதகமண்டலத்தில் விளையாட்டுப் பள்ளி அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ் அவர்கள், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கோவிந்தசாமி அவர்கள்.

திரு. ஆ. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, வணங்கும் கைகள் விலகும் முன்னே வரம் கொடுக்கும் புரட்சித் தலைவி அம்மாவைப் போல, நாங்கள் கேட்டவுடன் 300 கோடி ரூபாயை நீராதாரத்திற்கு வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கு முதற்கண் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எங்கள் தொகுதிக்குட்பட்ட கடத்தூர் ஒன்றியத்தில் கோம்பை என்ற ஒரு மலைக் கிராமம் இருக்கின்றது. அந்த மலைக் கிராமத்தில் இருக்கின்ற பள்ளிக் குழந்தைகள் படிப்பதற்கு ஏறக்குறைய 4 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டிய நிலை இருப்பதால், அந்தக் குழந்தைகளின் நலன் கருதி அங்கே ஒரு தொடக்கப் பள்ளியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தருவாரா என தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு தொடக்கப் பள்ளி துவங்குவதற்கு அனுமதி வழங்கியிருக்கின்றார்கள். அதில் உங்கள் பள்ளியும் இடம் பெறும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2020 மார்ச் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் கே. அர்ச்சுணன் அவர்கள்.

திரு. அம்மன் கே. அர்ச்சுணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும், எங்கள் மாவட்ட அமைச்சர் அவர்களையும், சக அமைச்சர்களையும், தங்களையும் வணங்குகின்றேன்.

கோவை மாவட்டத்தில் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களால் 2011–ல் உள் விளையாட்டு அரங்கம் அமைக்க நிதி ஒதுக்கப்பட்டது. இதுவரை அந்த உள் விளையாட்டு அரங்கத்தின் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோவை மாவட்டத்தைப் பற்றி கேட்டிருக்கின்றார்கள். மூலக் கேள்வி உதகமண்டலத்தைப் பற்றியது. அதுபற்றி துறையின் சார்பாக அறிந்து என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, விரைந்து அந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. சம்பத்குமார் அவர்கள்.

திரு. வே. சம்பத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக அன்றாட அவசியத்தை அன்றே சட்டமாக்கி, அடுத்த நொடியே செயல்படுத்தி, கடைசி குடிமகனும் கவலையின்றி வாழ்ந்திடவே நல்லாட்சி பல செய்த உழைக்கும் தலைவன், உழவர்களின் பாதுகாவலன், சிலுவம்பாளையம் பெற்றெடுத்த தங்கமகன், வாழும்

கரிகால்சோழன் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகின்றேன்.

தருமபுரி மாவட்டத்தை கண் இமைபோல் காத்து, கழகத்தையும், ஆட்சியையும் நல்வழிப்படுத்துகின்ற எங்களுடைய ஆசான் மாண்புமிகு தமிழக உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களை வணங்குகிறேன். அரூர் வட்டாரத் தலைமை நூலகக் கட்டடம் பழுதடைந்து, செயல்பாட்டில் இல்லாமல், தனியார் கட்டடத்தில் இயங்கி வருகின்றது.

மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், அரூர் வட்டார தலைமை நூலகத்திற்கு புதிய கட்டடம் ஒன்றை ஏற்படுத்தித் தருவாரா என தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 50 சதவிகித நிதியும், நூலக ஆணைக் குழு நிதியின் மூலமாக 50 சதவிகித நிதியும் வழங்கி இந்த ஆண்டே அந்தப் பணிகள் துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை அவர்கள்.

திரு. ஐ.எஸ். இன்பதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொரோனா தடுப்பு நடவடிக்கையில் இந்தியாவிற்கே வழிகாட்டுகின்ற வகையில் மிக விரைவாக, அது பரவுகின்ற நேரத்தைவிட, வேகத்தைவிட மிக அதிக விரைவில் செயல்படுகின்ற அரசு இந்த அரசு என்று வட மாநிலத்தில் இருக்கின்ற பத்திரிகைகள், பக்கத்தில் உள்ள கேரள மாநிலத்தில் இருக்கின்ற தொலைக்காட்சிகள் எல்லாம் பாராட்டுகின்ற இந்தச் சூழ்நிலையில், அதை ஏற்றுக்கொள்ளாத மனநிலையில் இருப்பவர்களை நாம் மறந்துவிடுவோம். குற்றச்சாட்டு என்று எடுத்துவிடக் கூடாது. மறந்துவிடுவோம். மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற இந்த அரசு, நேற்றையதினம் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களின்

2020 மார்ச் 23]

உத்தரவை சிரமேற்கொண்டு கடைப்பிடித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையை ஏற்று, தங்களுடைய இல்லங்களிலே தங்களை முடக்கிக் கொண்டிருந்த தமிழக மக்களை நெஞ்சார வாழ்த்தி, கரவொலி எழுப்பி, நமக்காகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் அனைவரையும் பாராட்டுகின்ற தமிழக மக்களின் உணர்வை, இந்த அவையில் வெளிப்படுத்தி, என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியையும் புலப்படுத்துகிறேன்.

முற்பகல் 10–05

என்னுடைய ராதாபுரம் தொகுதியில் விளையாட்டு வீரர்கள் நிறைந்திருக்கிறார்கள். எனவே, அவர்கள் அங்கு தங்கிப் பயிலும் வகையில் academy போன்ற ஒன்று அமைக்கப்படுமா என்று மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாக மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளையாட்டு வீரர்களுக்கான academy அமைக்க வேண்டுமென்று கோரியிருக்கின்றார். ஒவ்வொரு மாவட்ட வாரியாக தங்கும் விடுதிகள் கட்டப்பட்டு, அங்கே விளையாட்டு வீரர்களுக்கு உணவு வழங்குகின்ற வரலாற்றைப் படைக்கின்ற அரசாக இந்த அரசு விளங்கிக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு, விளையாட்டு வீரர்களுக்கு வழங்கி வந்த உணவுப் படியை நாளொன்றுக்கு ரூ.120/–லிருந்து ரூ.150/– ஆக உயர்த்தி வழங்கி வரலாறு படைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல ஒவ்வொரு மாணவருக்கும் உதவித் தொகையாக ரூ.500/–, ரூ.1,000/– வழங்குகின்ற வரலாறு தமிழ்நாட்டில் மட்டும்தான். நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து அந்தப் பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். ஆகவே, மாவட்ட அளவில் மட்டும்தான் தற்போது தங்கும் விடுதிகள் கட்டப்படுகின்றனவே தவிர, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையின்படி, ராதாபுரம் தொகுதியில் இந்த ஆண்டு தங்கும் விடுதி ஏற்படுத்துவதற்கு வாய்ப்பு இல்லை.